சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

சிறப்பு அமர்வு வழக்கு எண் 220/2024

அரசு தரப்பு சாட்சி 29 (LW- 49 ) நாள் 15.09.2025

பெயர் சுப்ரியா தொழில் காவல் ஆய்வாளர், வெளிப்பாளையம்

தந்தை பெயர் சிவநாதன் வயது 48.

கிராமம் வெளிப்பாளையம் மயிலாடுதுறை தாலுக்கா வெளிப்பாளையம்.

(1 முதல் 10 குற்றம்சாட்டப்பட்ட நபர்கள் சிறையிலிருந்து ஆஜர் படுத்தப்பட்டனர். 11ம் நபர் ஆஜரில்லை மனுக்கொடுத்து அனுமதிக்கப்பட்டது. குற்றம்சாட்டப்பட்ட நபர்கள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் தற்போது நாகை, வெளிப்பாளையம் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 20.03.2024 அன்று மயிலாடுதுறை காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியில் இருந்தபோது இரவ 22.20 மணிக்கு மயிலாடுதுறை அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின்பேரில் அங்கு சென்று பார்த்தபோது அங்கு சிகிச்சையில் இருந்த சரவணன், த/பெ. சுப்பிரமணியன், கலைஞர் காலனி, மயிலாடுதுறை என்பவர் மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளார் என்ற தகவலை பெற்ற அங்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த மேற்படி சரவணனிடம் புகார் வாக்குமூலம் பெற்று மயிலாடுதுறை காவல் நிலைய குற்ற எண். 161/2024, ச/பி. 147, 148, 341, 294(b), 307, 302, 120(B) இதச மற்றும் 25(1-B) ஆயுத சட்டம் உ/இ 3(1)(r),3(2)(s),3(1a) SC/ST Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல்

15/9/2025

தகவல் அறிக்கை அசாஆ 37 ஆகும். பின்னர் துரித முதல் தகவல் அறிக்கையை சிறப்பு உதவி ஆய்வாளர் சுப்பிரமணியன்ப என்பவர் மூலம் நாகப்பட்டிணம் மாவட்ட சிறப்பு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அதன் நகலை உயர் அதிகாரிகளுக்கு அவர் மூலம் அனுப்பி வைத்தேன். இது சம்பந்தமாக காவல் துணைக்கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார். புகார் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததை விவரத்தை சொன்னேன்.

**1, 3 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

காவல் நிலையத்திலிருந்து மயிலாடுதுறை அரசு மருத்துவமனை ஒரு கிமீ தூரத்திலிருக்கும். ஒரு 10 நிமிடத்தில் செல்லலாம். எனக்கு 22.20 மணிக்கு மருத்துவமனையிலிருந்து தகவல் வந்தது. திருவிழுந்தூர் தெற்கு வீதியிலிருந்து மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு 5 நிமிடத்தில் வந்துவிடலாம் என்றால் 15 நிமிடத்தில் வரலாம். சம்பவம் 9.00 மணிக்கு நடந்ததாக சொல்லப்பட்டது. புகார்தாரரின் விபத்து பதிவேட்டை பார்த்தேனா என்றால் பார்த்தேன் அதில் இரவு 22.20 மணிக்கு அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக உள்ளது. அஜித்குமார் என்பவர் இவ்வழக்கில் சொல்லப்பட்டுள்ள சம்பவத்தில் சம்பவ இடத்தில் இறந்துவிட்டதாக எஎன்னிடம் கொடுத்த புகாரில் சொல்லப்பட்டுள்ளது. பொதுமக்கள் சேர்ந்து ஆம்புலன்ஸ் மூலம் சரவணனை அனுப்பி விவரம் சொல்லப்பட்டுள்ளது. திருவிழுந்தூர் தெற்கு வீதி ஒரு பிராதான சாலை மயிலாடுதுறையின் முக்கிய பகுதி என்றால் சரி. அஜித்குமார் என்னானர் என்றால் புகாரில் என்னிடம் அவர் இறந்துவிட்டதாக சொன்னார். அவரின் உடல் எத்தனை மணிக்கு மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு எடுத்து வரப்பட்டது என்ற விவரம் தெரியாது. அது சம்பந்தமாக தகவல்

15/9/2025

கொடுக்கப்பட்டதா என்றால் எனக்கு புகார் பற்றிய விவரம் கிடைத்ததும் நிலையத்திலிருந்து மருத்துவமனைக்கு கிளம்பி சென்று விட்டேன். அந்த காவல் நிலையத்திற்கு நான் தான் நிலைய அதிகாரி. அஜித்குமார் மரணம் சம்பந்தமாக மருத்துவமனையிலிருந்து எதாவது தகவல் கிடைத்திருந்ததா அது பற்றி காவல்நிலையத்தில் எதாவது குறிப்பு எழுதப்பட்டதா என்றால் அது எனக்கு தெரியாது. காவல் நிலையத்தில் உள்ள பதிவேட்டில் அதை எழுதியிருப்பார்கள். அந்த விவரத்தை பொது நாட்குறிப்பில் எழுதவில்லை. ஆனால் பொதுநாட்குறிப்பில் பதிவு செய்யப்படவேண்டும். இன்டிமேசன் பதிவேட்டில் பதிவு செய்திருப்பார்கள். மருத்துவமனையிலிருந்து தகவல் கிடைத்தபோது நான் காவல் நிலையத்தில் இருந்தேன். அதை நான் பொது நாட்குறிப்பில் பதிவு செய்யவில்லை. அவ்வாறு பொது நாட்குறிப்பில் பதிவு செய்த விவரத்தை முதல் தகவல் அறிக்கையில் காலம் 3 சியில் குறிப்பிடவேண்டுமென்றால் நான் குறிப்பிடவில்லை. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட விவரம் பொது நாட்குறிப்பில் பதிவு செய்யப்படும். அதை பொது நாட்குறிப்பில் பதிவு செய்துள்ளோம். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தபின் தான் பொது நாட்குறிப்பில் பதிவு செய்யப்படுமா என்றால் பதிவு செய்ய வேண்டும். நான் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பதிலளிக்கிறேன் என்றாலும் அது சட்டத்திற்கு எதிரானது என்றால் சரியல்ல. தஞ்சாவூர் கிளம்புவதற்கு முன்பாக சரவணனின் விபத்து பதிவேட்டை பார்த்து விட்டு தான் சென்றேன். மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் கொடுத்த விபத்து பதிவேட்டில் சரவணன் மீது மது வாடை வீசியதாக மருத்துவர் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அதில் நான்கு அடையாளம் தெரியாத நபர்கள் தாக்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் சிதைந்த காயம்

இருந்ததாக சொல்லப்பட்டுள்ளது. நான் மயிலாடுதுறையிலிருந்து 10.40 மணிக்கு தஞ்சாவூர் புறப்பட்டேன். மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் அஜித்குமாரின் உறவினர்கள் நிறையபேர் இருந்தார்கள் என்றால் சுமார் 5 பேர் இருந்திருப்பார்கள். துரைக்கண்ணு என்பவர் அப்போது அங்கிருந்தார். அவர் தான் சரவணனை மருத்துவமனையில் கொண்டு அனுமதித்ததாக விபத்து பதிவேட்டில் உள்ளது என்றால் சரிதான். அங்கிருந்தவர்களிடம் சம்பவம் பற்றி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. இதச பிரிவு 120 (B) சம்பந்தமாக புகாரில் எந்த விவரமும் சொல்லப்படவில்லை. அரிவாளால் வெட்டியதால் ஆயுதச்சட்டம் போடப்பட்டது. சரவணன் மருத்துவமனையில் சென்று பார்த்தபோது வாக்குமூலம் கொடுக்கும் அளவிற்கு நல்ல மனநிலையில் தான் இருந்தார். அந்த புகாரை நான் கைப்பட எழுதினேன். அந்த புகாரில் யார் யார் வெட்டினார்கள் என்று பெயர் குறிப்பிட்டு சொல்லவில்லை. புகாரில் தன் நாயை மேட்டிங் விடச்சென்றதாக சொன்னாரா என்றால் இல்லை நாயை எடுத்து கொண்டு ஆனந்தராஜை பார்க்க போனதாக சொன்னார். அடையாளம் எதுவும் சொல்லப்படவில்லை. முதல் தகவல் அறிக்கையை சிறப்பு உதவி ஆய்வாளர் சுப்பிரமணியன் மூலம் அதிகாலை 3.15 மணிக்கு கொடுத்து அனுப்பினேன். பேருந்தில் சென்றால் நாகப்பட்டிணத்திற்கு இரண்டு மணி நேரமாகும். நான் சொல்வது போல் புகார் வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. அஜித்குமார் என்பவர் யாராலோ தாக்கப்பட்டு திருவழுந்தூர் தெற்கு வீதியில் பிரேதம் கிடப்பதாக அந்த பகுதியிலிருந்தவர்கள் தகவல் கொடுத்து நான் உட்பட காவலர்கள் அங்கு சென்று பிரேதத்தை பார்த்து அங்குள்ளவர்களை விசாரித்துவிட்டு பின்னர்

18/9/2024

கேள்விக்கு கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் கடுமையாக ஆட்சேபித்தார். இந்த சாட்சி புகார் வாக்குமூலத்தை பெற்று முதல் தகவல் அறிக்கையை மட்டும் பதிவு செய்துள்ளார் என்றும் அதனால் இந்த வினாவை அவரிடம் கேட்க இயலாது என்று ஆட்சேபித்தார். எனவே ஆட்சேபனைக்குட்பட்டு வினா அனுமதிக்கப்படுகிறது. இதன் தன்மை இறுதியில் முடிவு செய்யப்படும். சாட்சி நான் சடலத்தை எடுத்து 108 ஆம்புலன்ஸில் செல்லவில்லை என்கிறார். அஜித்குமாரை நான் தான் அரசு மருத்துவமனைக்கு எடுத்து சென்றேன் என்றும் புகார் வாக்குமூலத்தில் அடையாளம் தெரியாத நான்கு நபர்கள் என்று சொல்லியுள்ளதால் அதை நான் இப்போது மறுக்கிறேன் என்றால் சரியல்ல. புகாரில் இறந்தவர் பயணித்த இருசக்கர வாகனத்தில் நாயை பின்புறம் வைத்து எடுத்து சென்றதாக சொல்லப்படவில்லை என்றால் நாயுடன் இருசக்கரவாகனத்தில் ஆனந்தராஜ் வீட்டிற்கு சென்றதாக சொல்லப்பட்டுள்ளது. 25(1-B) ஆயுதச்சட்டம் பிரிவு துப்பாக்கி மற்றும் வெடிபொருட்கள் தொடர்பான பிரிவுகள் என்றால் பயங்கரமான ஆயுதங்கள் என்ற சொல்லப்பட்டுள்ளது. நான் பெற்ற புகாரில் 25(1-B) ஆயுதச்சட்டம் பிரிவு பெருந்தாது என்றால் சரியல்ல. நான் தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை அரசு மருத்துவமனை விபத்து பதிவேடுகளை பார்வையிட்டேன். அதில் அடையாளம் தெரியாத நான்கு நபர்கள் அரிவாளால் வெட்டிதாக உள்ளது என்றால் சரிதான். நான் பதிவு செய்த புகார் வாக்குமூலத்தில் அடயாளம் தெரிந்த நபர் அல்லது தெரியாத நபர்கள் என்ற விவரம் எதுவும் இல்லை என்றால் மோட்டார் சைக்களில் வந்த நான்கு பேரும் சிலரும் வந்தார்கள் என்று புகார் வாக்குமூலத்தில் உள்ளது. முதல் தகவல் அறிக்கையின் முதல் பக்கத்தில் அடயாளம் தெரிந்த பெயர்,

18/9/2025

மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் இறந்தவரின் உறவினர்களை விசாரித்தேன் என்று சொன்னாலும் அசா1 சரவணன் என்பவர் பின்னால் மருத்துவமனைக்கு வரவைக்கப்பட்டு விபத்து பதிவேடு ஜோடிக்கப்பட்டு பின்னர் தஞ்சாவூர் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார் என்றால் சரியல்ல. அன்று இரவு முழுவதும் விசாரித்தும் என்னால் எதிரிகளை நிர்ணயிக்க முடியவில்லை என்றால் சரியல்ல. இந்த நிலையில் தான் இவ்வழக்கு புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை 21.03.2024 அன்று காலை 9.30 மணிக்கு மேல் காலந்து ஆலோசிக்கப்பட்டு ஜோடிக்கப்பட்டது என்றால் சரியல்ல். பின்னர் பலரை விசாரித்து எதிரிகளை வழக்கில் சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. இந்த சம்பவம் பற்றி முதன்முதலாக கிடைத்த தகவல் மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புகாரில் இரவு 9.00 மணி என்று சொல்லப்பட்டுள்ளது. வெளிச்சம் பற்றி சொல்லப்படவில்லை.

**5 முதல் 8, 11 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

முதல் தகவல் அறிக்கயின் முதல் பக்கத்தில் அதிகாலை 2.30 மணிக்கு தகவல் கிடைத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மயிலாடுதுறை அரசு மருத்துவமனையிலிருந்து 21.03.2024 அன்று இரவு 10.20 மணிக்கு தகவல் கிடைத்ததாக சொல்லப்பட்டுள்ளது. அன்றைய தினம் நிலைய பொறுப்பு அதிகாரி நான் தான் காலை முதல் அங்கு தான் இருந்தேன். பொது நாட்குறிப்பில் இரண்டு மணிநேரத்திற்கு ஒரு முறை எழுதப்படவேண்டுமென்றால் சரிதான். சம்பவம் நடந்தபோது பாராளுமன்ற தேர்தல் நடவடிக்கைகள் இருந்த நேரம் என்றால் சரிதான். இவ்வழக்கின் அசா 15,16, 17 சாட்சிகள் மயிலாடுதுறை நகர காவல் ஆய்வாளர், மற்றும் உதவி ஆய்வாளர் வந்து அஜித்குமாரின் சடலத்தை 108 ஆம்புலன்ஸில் எடுத்து சென்றதாக சொல்லியுள்ளார்கள் அது சரியா தவறா? என்ற

15/9/2025

முகவரி தெரியாத நான்கு நபர்கள் மற்றும் சிலர் என்று சொல்லப்பட்டுள்ளது. எதிரிகளின் சாதியை பற்றி புகாரிலும் முதல் தகவல் அறிக்கையிலும் குறிப்பிடவில்லை. இந்த நிலையில் அதற்குரிய சட்டப்பிரிவை பொருந்தாமலேயே பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. புகார் வாக்குமூலத்தில் தஞ்சாவூர் என்று அங்கு வந்து என்ற இரண்டிற்கும் இடையில் செருகியுள்ளனேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் புகார் மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை ஏற்பட்ட தாமதத்தை சரிசெய்ய தஞ்சாவூரில் பெறப்பட்டதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அஜித்குமாரின் விபத்து பதிவேடு இந்த வழக்கிற்கு பாதகமாக இருப்பதால் மறைக்கப்பட்டுள்ளது என்றால் சாட்சி புலன் விசாரணை அதிகாரி அல்ல என்பதால் இவ்வினா அனுமதிக்கப்படவில்லை. இந்த வழக்கின் புகார் தஞ்சாவூரில் பெறப்படததால் தான் எத்தனை மணிக்கு தொடங்கி எத்தனை மணிக்கு முடிக்கப்பட்டது என்ற விவரம் புகாரில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான் அந்த விவரம் புலனாய்வு அதிகாரி விசாரித்தபோது நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. மயிலாடுதுறை காவல் நிலையத்தில் கண்ணன் என்பவர் கொலை செய்யப்பட்ட வழக்கு விவரம் இருப்பது எனக்கு தெரியும். கண்ணன் கொலை வழக்கில் எதிரியாக இருந்த அசா 1ம் பிற எதிரிகளும் ஒன்று கூடி அவ்வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக பிற சாதியை சேர்ந்த நபர்களான இறந்த கண்ணனின் உறவினர்களையும் கண்ணன் வழக்கு சாட்சிகளையும் சேர்க்க வேண்டுமென்ற எண்ணத்தில் எழுப்பிய பிரச்சனையினால் இவ்வழக்கில் SC/ST சட்டப்பிரிவு சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல.

15/9/2026

புகாரில் சாதியை குறிப்பிட்டு திட்டியதாக உள்ளது அதனால் அந்த பிரிவை சேர்த்துள்ளேன். சாதியை குறிப்பிட்டு திட்டினால் மட்டுமே அந்த சட்டப்பிரிவு பொருந்தாது என்றால் சரியல்ல.

2,4,9,10 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் இதே குறுக்கு விசாரணையை ஏற்கிறார்கள்.

15/9/20

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

15/9/20

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

## சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:– முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

சிறப்பு அமர்வு வழக்கு எண் 220/2024

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 30 (LW– 46 ) | நாள் | 15.09.2025 |
| பெயர் | சுப்பிரமணியன் | தொழில் | சிறப்பு உதவி ஆய்வாளர் |
| தந்தை பெயர் | ராமசாமி | வயது | 52 |
| கிராமம் நல்லம்பல் | மயிலாடுதுறை | தாலுக்கா | திருநள்ளாறு |

(1 முதல் 10 குற்றம்சாட்டப்பட்ட நபர்கள் சிறையிலிருந்து ஆஜர் படுத்தப்பட்டனர். 11ம் நபர் ஆஜரில்லை மனுக்கொடுத்து அனுமதிக்கப்பட்டது. குற்றம்சாட்டப்பட்ட நபர்கள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் தற்போது பொறையார் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2024 ல் மயிலாடுதுறை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக இருந்தபோது கடந்த 21.03.2024 அன்று அதிகாலை 3.15 மணிக்கு மயிலாடுதுறை காவல் நிலைய குற்ற எண். 161/2024 வழக்கின் துரித முதல் தகவல் அறிக்கையை மயிலாடுதுறை காவல் ஆய்வாளர் என் வசம் ஒப்படைக்க அதை நான் பெற்றுக்கொண்டு நாகப்பட்டணம் மாவட்ட சிறப்பு நீதிமன்றத்தின் நீதிபதியின் கேம்ப் ஆபிஸிற்கு பேருந்தில் எடுத்து சென்றேன். அங்கிருந்தவர்கள் என்னை நீதிமன்றத்திற்கு வந்து ஒப்படைக்க சொன்னார்கள். நீதிமன்றத்தில் இருந்த அலுவலர்கள் நீதிமன்ற வழக்கு அழைப்புகள் முடிந்தவுடன் காலை 11.30 மணிக்கு பெற்றுக்கொண்டார்கள். பின்பு மயிலாடுதுறை வந்து என் கடவுச்சீட்டை ஒப்படைத்தேன். உயரதிகளுக்கு துரித முதல் தகவல் அறிக்கை நகலை ஒப்படைத்தேன். பின்பு நிலையம் வந்து அறிக்கை செய்து கொண்டேன்.

SS-373
15/9/2025

இது சம்பந்தமாக புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்கள்.

**1, 3 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

மயிலாடுதுறை, துணைக்காணிப்பாளர் அலுவலகத்தில் ஒப்படைத்தேன். மயிலாடுதுறை DCRB அலுவலகத்தில் ஒப்படைத்தேன். துணைக்கண்காணிப்பாளர் என்னை விசாரித்தபோது பேருந்தில் சென்று நீதிமன்றத்தில் ஒப்படைத்த விவரம் முழுவதையும் சொல்லியுள்ளேன். அதை பதிவு செய்துள்ளார்கள். இந்த விவரங்களை நான் புலன் விசாரணை அதிகாரியிடம் சொல்லவில்லை என்றாலும் முதன்முதலாக இப்போது தான் சொல்கிறேன் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை 21.03.2024 அன்று காலை 9.30 மணிக்கு தான் தயார் செய்யப்பட்டு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது என்றால் சரியல்ல.

**5 முதல் 8, 11 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பேருந்தில் செல்லும்போது என் அடையாள அட்டையை காண்பித்து சென்றேன். கடவுச்சீட்டு எதுவும் காட்டவில்லை. நீதிமன்றத்தில் வழக்கு நடந்து கொண்டிருந்ததால் கால தாமதமாக துரித முதல் தகவல் அறிக்கையை புலன் விசாரணை அதிகாரியிடம் சொல்லியுள்ளேன். காலதாமதத்தை மறைப்பதற்காக காரணத்தை கண்டுபிடித்து தற்போது முதன்முதலாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2,4,9,10 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் இதே குறுக்கு விசாரணையை ஏற்கிறார்கள்.

SS 373
15/09/2025

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சுருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

15/9/25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை